

## திருச்சி தெற்கு–மத்திய–வடக்கு மாவட்டக் கழகங்களுக்கு 465 புதிய நிர்வாகிகள்:

# எல்லா கட்சிக்காரர்களின் வீடுகளுக்கும் செல்லுங்கள்! மண் - மொழி-உரிமை காக்க கழகத்திற்கு ஆதரவு கேளுங்கள்!

## திருச்சி இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டத்தில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறைகூவல்!

**திருச்சி,ஜூலை 16 -**

**திருச்சி, கலைஞர் அறிவாலயத்தில், திருச்சி தெற்கு-மத்திய மற்றும் வடக்கு மாவட்டத் துக்குட்பட்ட பகுதிகளில், கழக இளைஞர் அணிக்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் அமைப்பாளர்-துணை அமைப்பாளர்களுக்கான ஆலோசனைக் கூட்டத்தில், கழக இளைஞர் அணிச் செயலாளர்-துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார்..**

**இளைஞர் அணி பொறுப்புக்கு வந்துள்ள புதிய 465 நிர்வாகிகளை வாழ்த்திப் பேசினார். அப்போது அவர், "எல்லா கட்சிக்காரர்களின் வீடுகளுக்கும் செல்லுங்கள், மண் - மொழி-உரிமை காக்க, கழகத்திற்கு ஆதரவு கேளுங்கள்" என்று, புதிய அமைப்பாளர்-துணை அமைப்பாளர்களுக்கு அறைகூவல் விடுத்தார்.**

**கழக இளைஞர் அணிச்செயலாளர்-துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**

திருச்சி தெற்கு, வடக்கு மற்றும் மத்திய மாவட்டத்துக்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்று, உங்களை எல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். முதலில், புதிய பொறுப்புகளுக்கு வந்துள்ள 465 பேருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மத்திய பகுதி திருச்சிதான்**

திருச்சி என்றால், திருப்புமுனை என்று சொல்வார்கள். முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், நம் கழகத் தலைவர் அவர்களுக்கும் மிகவும் நெருக்கமான பிடித்த ஊர் என்றால், அது திருச்சிதான். திருச்சி வரைபடத்தில் மட்டும் தமிழ்நாட்டிற்கு மத்திய பகுதி கிடையாது. கழகத்தின் வரலாற்றில் பல்வேறு மாநாடுகள், நிகழ்ச்சிகள் நடத்துகின்ற கழகத்தின் மத்திய பகுதியும் திருச்சிதான்.

நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். மீண்டும் சொல்கிறேன். சட்டமன்ற உறுப்பினர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர், இப்போது துணை முதலமைச்சர் இப்படி எத்தனையோ பொறுப்புகள் வகித்தாலும், என் மனதிற்கு எப்போதுமே மிகவும் நெருக்கமான பொறுப்பு என்றால், அது கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளர் என்ற பொறுப்புதான். அதே உணர்வுடன்தான், இன்றைக்கு இந்த நிகழ்ச்சியில் உங்களை எல்லாம் சந்திக்க வந்திருக்கிறேன். உங்கள் முன்பு நின்று கொண்டு இருக்கிறேன்.

**நமக்கெல்லாம் பெருமை**

நம் கழகத்தில் 25 அணிகள் இருக்கின்றன. இப்படி கழகத்தில் எத்தனை அணிகள் இருந்தாலும், 'கழகத்தின் இதயம்' என்றுச் சொன்னால் அது நம் தலைவர் அவர்கள் உருவாக்கிய நம்இளைஞர் அணிதான். முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் பலமுறை பாராட்டி இருக்கிறார். தி.மு.க-வில் எத்தனையோ அணிகள் இருந்தாலும், முதன்மையான அணி என்றால், அது இளைஞர் அணி தான் என்று பாராட்டப்பட்ட அணி நம் இளைஞர் அணி.

நம் இளைஞர் அணிக்குப் பல பெருமைகள் இருக்கின்றன. அதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இந்தியாவில் இன்றைக்கு பல்வேறு இயக்கங்களில் இளைஞர் அணி இருக்கிறது. ஆனால், 45 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவிலேயே ஒரு இயக்கத்தில் இளைஞர் அணி என்று தொடங்கியது என்றால் அது நம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணிதான். அதை தொடங்கியவர் நம் கழகத் தலைவர் அவர்கள்தான். அப்படிப்பட்ட இளைஞர் அணியில் இருப்பதே நமக்கெல்லாம் ஒரு பெருமை. அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களாக நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளீர்கள். பல கட்டங்களுக்குப் பிறகு, பார்த்து பார்த்துதான் இந்த பொறுப்புகளுக்கு உங்களை நியமித்து இருக்கிறோம். நீங்கள் எல்லாம் காலரை தூக்கிவிட்டுச் சொல்லலாம். நான் ஏதோவொரு பரிந்துரைச் கடிதத்தை வாங்கிவிட்டு வந்துவிடவில்லை.

**தேர்வு செய்த முறை**

மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்களின் பரிந்துரைகளையும் வாங்கி, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் ஒவ்வொரு மாவட்டமாக சென்று, அங்கு நேர்காணல் நடத்தி அவர்கள் கொடுத்த பட்டியலின் அடிப்படையிலும், ஏற்கனவே செயல்பட்டுக் கொண்டிருந்து நிர்வாகிகளின் பணிகளையும் கவனத்தில் எடுத்துக் கொண்டுதான் அந்த நியமனங்களை நாங்கள் செய்து இருக்கிறோம்.

இந்த நியமனங்களை நிறைவு செய்வதற்குள் நான், உங்கள் மண்டல பொறுப்பாளர் ஆனந்தகுமார் அவர்கள், மாவட்ட அமைப்பாளர் வெங்கடேஷ்குமார், கார்த்தி, அன்பகம் செந்தில் அனைவரும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் குறைந்தது, இரண்டரை மணி நேரம் செலவிட்டுத்தான் உங்களை எல்லாம் தேர்வு செய்து இருக்கிறோம். உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் இந்த பொறுப்பு, பதவி என்று நினைத்துவிடக் கூடாது, அதை நீங்கள் மிகப்பெரிய பொறுப்பு என்று கருத வேண்டும்.

இளைஞர் அணி என்பது ஒரு சார்பு அணி. ஆகவே, நீங்கள் எந்த பணிகளை மேற்கொண்டாலும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்களின் ஆலோசனையையும், அனுமதியையும் பெற்று செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அறிவாலயத்தில் இருந்து பல பணிகள் கொடுப்பார்கள். தலைவர் அவர்கள் கட்டளையிடுவார்கள். நம் இளைஞர் அணிக்கு நிறைய பணிகள் தருவார்கள். அன்பகத்தில் இருந்து சில பணிகளுக்கு உத்தரவிடுவார்கள். எந்த பணியாக இருந்தாலும் நீங்கள் ஒன்றிய அமைப்பாளராக இருந்தால், ஒன்றிய செயலாளரிடம் சொல்லிவிட்டுத்தான் அதை செய்ய வேண்டும். நீங்கள் எடுத்து வைக்கின்ற ஒவ்வொரு அடியும் சரியான அடியாக இருக்க வேண்டும். எந்த சிறு தவறுக்கும் நீங்கள் இடம் கொடுத்துவிடக்கூடாது.

**கூடுதல் கவனம் வேண்டும்**

நம் எதிர்க்கட்சிகள் காத்துக்கொண்டு இருக்கிறார்கள். அரசின் மேல், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மேல் ஏதாவது குறை சொல்ல முடியுமா என்று காத்துக்கொண்டு இருக்கிறார்கள். சிறிய தவறு நடந்தால்கூட, அதை பெரிதாக பூதகரமாக்கி விடுவார்கள். நீங்கள் செய்கின்ற ஒவ்வொரு பணியிலும் கூடுதல் கவனம் இருக்க வேண்டும்.

இளைஞர் அணியைப் பொறுத்தவரைக்கும் களத்தில் நீங்கள் வேலை செய்தால் நிச்சயம் உங்களுக்கான அங்கீகாரம் சரியான நேரத்தில் நிச்சயமாக வந்து சேரும். அதற்கு உதாரணம் இந்த மேடையிலேயே உட்கார்ந்து இருக்கிறார்கள். இளைஞர் அணியில் மாநில துணைச் செயலாளராக இருந்த அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் இன்று தமிழ்நாட்டின் பள்ளிக்கல்வித்துறை அமைச்சராகி இருக்கிறார். மாவட்டக் கழகச் செயலாளராகவும் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார். அதேபோல், உங்களின் மண்டல பொறுப்பாளர் சகோதரர் ஆனந்தகுமார் அவர்கள் நாமக்கல் மாவட்ட இளைஞர் அணியின் துணை அமைப்பாளராக சிறப்பாக பணியாற்றியதால், தலைவர் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்தான் ஆனந்தகுமார் அவர்கள். இன்றைக்கு மிகச் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார். அவரின் உழைப்பைப் பார்த்துதான் தலைவர் அவர்கள் அந்தப் பொறுப்பை அவருக்குக் கொடுத்தார்கள். லால்குடி சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் சௌந்தரபாண்டியன் அவர்கள் இளைஞர் அணியில் ஒன்றிய அமைப்பாளராக சிறப்பாக பணியாற்றியவர். திருச்சி மாநகர மேயர் அன்பழகன் அவர்கள் இளைஞர் அணியில் மாவட்ட அமைப்பாளராக பணியாற்றியவர். மாநகரச் செயலாளர் மதிவாணன் அவர்களும் இளைஞர் அணியில் பணியாற்றி இன்றைக்கு இந்த பொறுப்பிற்கு வந்து இருக்கிறார்கள். ஆகவே, இதையெல்லாம் மனதில் வைத்து ஒன்றிய, நகர, பேரூர், பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் நீங்களும் கழகப் பணியை ஆற்ற வேண்டும் என்றுக் கேட்டுக் கொள்கிறேன்.

உங்களின் பணிகளை நாங்கள் கூர்ந்து கவனித்துக் கொண்டேதான் இருப்போம். நீங்கள் செய்கின்ற ஒவ்வொரு வேலையையும், ஒவ்வொரு பணியையும், நீங்கள் கலந்து கொள்கின்ற ஒவ்வொரு நிகழ்ச்சியையும் உங்களுக்குக் கொடுக்கப்பட்டு இருக்கின்ற மினிட் புக்கில் பதிவேற்றம் செய்யுங்கள். நாளைக்கு யாராவது உங்கள் மீது குறை கூறும் நோக்கத்துடன் இந்தப் பையன் எந்த வேலையும் செய்யவில்லை, எந்த நிகழ்ச்சியிலும் கலந்துகொள்ளவில்லை என்று சொன்னால், உங்களிடம் இருக்கின்ற ஒரே சாட்சி இந்த மினிட் புக்தான்.

இளைஞர் அணி சார்பாக பல்வேறு பணிகளை நாம் செய்து கொண்டிருக்கிறோம். 'இல்லந்தோறும் இளைஞர் அணி' என்று இளைஞர் அணிக்கு புதிய உறுப்பினர்களை ஒவ்வொரு வீடாகச் சென்று சேர்த்துக் கொண்டு இருக்கிறோம். இங்கு வந்திருக்கின்ற புதிய நிர்வாகிகள் அந்தப் பணியை விரைப்படுத்த வேண்டும். ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று கழகத்தின் கொள்கைகளை, இளைஞர் அணியின் பணிகளை, கழக அரசின் சாதனைகளை நீங்கள் எடுத்துச் சொல்லி ஒவ்வொருவரையும் உறுப்பினராக சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.




**மூன்று திட்டங்கள்**

இந்த திருச்சி மாவட்டத்தில் நம் கழக அரசு செய்து வருகின்ற திட்டங்களை மக்களிடம் கொண்டுபோய் சேருங்கள். மக்களுக்கு தொடர்ந்து அதை ஞாபகப்படுத்திக் கொண்டே இருங்கள். மக்களோடு மக்களாக, மக்களிடம் தொடர்ந்து தொடர்பில் இருங்கள். அதில் மூன்று திட்டங்களை மட்டும் உங்களுக்கு சொல்ல விரும்புகிறேன். தேர்தல் அறிக்கையில் நாம் சொன்ன வாக்குறுதிதான். நாம் ஆட்சிக்கு வந்ததும், தலைவர் அவர்கள் போட்ட முதல் கையெழுத்தே மகளிருக்குக் கட்டணமில்லா விடியல் பயணம் திட்டத்தில்தான். இந்த விடியல் பயணம் திட்டத்தின் மூலமாக இந்த நான்கு வருடத்தில் மகளிர் தமிழ்நாடு முழுவதும் 730 கோடி பயணங்களை மேற்கொண்டு இருக்கிறார்கள். இந்த திருச்சி மாவட்டத்தில் மட்டும் 36 கோடியே 65 லட்சம் பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள். ஒவ்வொரு மகளிரும் மாதம் 900 ரூபாயிலிருந்து 1,000 ரூபாய் வரை இந்தத் திட்டத்தில் மட்டும் சேமிக்கிறார்கள்.

**8 லட்சம் மாணவர்கள்**

மாணவர்கள் படிக்க வேண்டும் என்று தமிழ்ப்புதல்வன் திட்டம், புதுமைப்பெண் திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்தார்கள். ஒவ்வொரு மாதமும் 8 லட்சம் மாணவர்கள் பயன்பெறுகிறார்கள். இந்த திருச்சி மாவட்டத்தில் மட்டும் 35 ஆயிரம் மாணவ, மாணவிகள் மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத்தொகை பெற்று வருகிறார்கள்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். இந்தியாவிலேயே நம் தமிழ்நாட்டில் மட்டும் தான் இந்தத் திட்டம் இருக்கிறது. முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய பள்ளிக் குழந்தைகள் ஒவ்வொரு நாளும் 20 லட்சம் குழந்தைகள் பயன்பெற்று வருகிறார்கள். பள்ளிகூடத்திற்கு வந்தால் காலையில் தரமான உணவு, அதன் பிறகு தான் படிப்பு. அதில் இந்த திருச்சி மாவட்டத்தில் மட்டும் 58,000 பள்ளி குழந்தைகள் காலை உணவுத் திட்டத்தின் மூலம் பயன்பெற்று வருகிறார்கள்.

இன்றைக்கு தமிழ்நாடே எதிர்பார்க்கின்ற ஒரு திட்டம். அதுதான் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம். தலைவர் அவர்கள் ஏற்கனவே, 22 மாதங்களாக கொடுத்துவிட்டார். ஒவ்வொரு மாதமும் ஒரு கோடியே 15 லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் மகளிர் உரிமைத்தொகை வழங்கப்பட்டுவிட்டது. சில இடத்தில் எங்களுக்கு பெயர் விடுபட்டு போய்விட்டது என்று கோரிக்கைகளை வைத்தார்கள். உங்களுக்கான முகாம் இப்போது தொடங்கப் போகிறது. இந்த திருச்சி மாவட்டத்தில் மட்டும், 4 லட்சத்து 42 ஆயிரம் மகளிர் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தின் வாயிலாக பயன்பெற்று வருகிறார்கள். நாளைக்கு இதற்கான சிறப்பு முகாம்கள் நடத்தப்பட இருக்கின்றன. புதிதாக விண்ணபிக்க விரும்புவோர் நாளை விண்ணப்பிக்கலாம். அதன் விதிகளிலும் முதலமைச்சர் அவர்கள் சில தளர்வுகளைக் கொடுத்து இருக்கிறார்கள்.

இதையெல்லாம் மக்களிடம் எடுத்துச் சொல்லி நீங்கள் விளக்க வேண்டும். நிச்சயம் தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் ஒருவராவது நம் அரசின் திட்டங்களால் பயன்பெற்று இருப்பார்கள்.

**5 லட்சம் நிர்வாகிகள்**

இளைஞர் அணியின் சார்பாக பாகத்திற்கு ஒருவரை தேர்ந்தெடுத்து, சமூக வலைதளப் பயிற்சி வகுப்பையும் தொடர்ந்து நடத்திக் கொண்டு வருகிறோம். இளைஞர் அணியில் மாவட்டத்திற்கு ஒருவரை சமூக வலைதள இளைஞர் அணி துணை அமைப்பாளராகவும் நியமித்துக்கொண்டு வருகிறோம். இது வரை 10 மாவட்டங்களுக்கு அறிவிப்பு வந்து விட்டது. மீதி இருக்கின்ற மாவட்டங்களுக்கு விரைவில் அந்த அறிவிப்புகள் வரும். அதுமட்டுமல்ல மாநகர, பேரூர், வார்டுகள் மற்றும் ஒன்றியத்திற்குக் கீழ் வருகின்ற உள்ளாட்சிகளுக்கான அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களையும் விரைவில் தேர்ந்தெடுக்க இருக்கிறோம். இந்த பணிகளுக்கான அறிவிப்புகள் வந்தால், தமிழ்நாடு முழுவதும் நம் இளைஞர் அணியில் மட்டும் குறைந்தது 5 லட்சம் பேர் நிர்வாகிகளாக மட்டுமே இருப்பார்கள்.

**8 மாதங்கள்தான் இருக்கின்றன**

இந்தியாவில் எந்த ஒரு இயக்கத்திற்கும் சார்பு அணிக்கு என்று இப்படி ஒரு சாதனையும், வரலாறும் கிடையாது. மற்ற இயக்கங்களில் மொத்தமே வெறும் ஐந்து லட்சம் நிர்வாகிகள் மட்டுமே இருப்பார்கள். எனவே இப்படி பல்வேறு பணிகளை நம் இளைஞர் அணி செய்து கொண்டு இருக்கிறது. இதையெல்லாம் புரிந்துகொண்டு நீங்கள் களத்தில் உழைக்க தயாராக இருங்கள். உங்கள் கட்டுப்பாட்டில் ஒரு 150 வாக்குகள் இருந்தால், உங்களை யாராலும் தவிர்க்க முடியாது. அதை நீங்கள் மனதில் வைத்துக் கொள்ளுங்கள். தேர்லுக்கு இன்னும் 8 மாதங்கள் தான் இருக்கின்றன. அதற்கு நீங்கள் இப்போதிலிருந்தே தயாராக வேண்டும். நமக்கு இப்போது இருக்கின்ற ஒவ்வொரு மணித்துளியும் முக்கியமானது.

**ஒரே முதலமைச்சர்**

இன்றைக்கு தமிழ்நாடு மிகமிக முக்கியமான பிரச்சினைகளை எதிர் கொண்டிருக்கிறது. புதிய கல்விக் கொள்கை என்று சொல்லி ஒன்றிய அரசு தமிழ்நாட்டின் மேல் திணிக்கப் பார்க்கிறது. புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொண்டால்தான் பள்ளிக் கல்வித்துறைக்கு கொடுக்க வேண்டிய 2,500 கோடி ரூபாயை தருவோம் என்று ஒன்றிய அமைச்சர் மிரட்டுகிறார். புதியக் கல்விக் கொள்கையில் திருட்டுத்தனமாக இந்தியை, தமிழ்நாட்டின் மீது திணிக்கப் பார்க்கிறார்கள். புதிய கல்விக் கொள்கையின் மூலம் குலக்கல்வியை தமிழ்நாட்டின் மீது திணிக்கப் பார்க்கிறார்கள்.

நம் தலைவர் அவர்கள் சொல்லிவிட்டார். 2,500 கோடி இல்லை, நீங்கள் பத்தாயிரம் கோடி ரூபாய் கொடுத்தாலும் உங்கள் புதிய கல்விக் கொள்கையை என் தமிழ்நாட்டு மக்கள் மீது திணிக்கமாட்டேன் என்று தைரியமாக சொன்ன ஒரே முதலமைச்சர், நம் முதலமைச்சர் அவர்கள்தான்.

தொகுதி மறுவரையைறை என்ற ஒன்றைக் கொண்டு வருகிறார்கள். அந்தத் தொகுதி மறுவரையறையைக் கொண்டுவந்து தமிழ்நாட்டில் இருக்கின்ற 39 மக்களவைத் தொகுதிகளை 31 தொகுதிகளாக குறைக்கப் பார்க்கிறார்கள். தமிழ்நாட்டின் மாநில உரிமைகளைப் பறிக்கப் பார்க்கிறார்கள். இதையெல்லாம் நீங்கள் புரிந்துகொண்டு, மக்களுக்குப் புரிய வைக்க வேண்டும்.

**ஓரணியில் தமிழ்நாடு**

இன்றைக்கு நம் தலைவர் அவர்கள் 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற முன்னெடுப்பை ஆரம்பித்து வைத்திருக்கிறார். இது 10 நாட்களாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த 10 நாட்களில் ஒரு கோடி உறுப்பினர்களை, தமிழ்நாடு முழுவதும் கழகத்தில் உறுப்பினர்களாக சேர்த்து இருக்கிறோம். தலைவர் அவர்கள் சென்னையில் அவரே நேரடியாக களத்தில் இறங்கி, வீடு வீடாகச் சென்று வாக்காளர்களைச் சேர்த்தார். இரண்டு நாட்களுக்கு முன்பு திருவாரூர் செல்லும்போது, திருவாரூரிலும் வாக்காளர்களைச் சந்தித்து, கழகத்தில் இணைய வைத்தார். நான் என்னுடைய தொகுதி சேப்பாக்கம்-திருவல்லிக்கேணியிலும் அந்தப் பணிகளை செய்தேன்.

இங்கு இருக்கின்ற நீங்கள் இந்தப் பணிகளை உங்களுக்குள் பகிர்ந்துகொண்டு, மக்களை சந்தித்து 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற முன்னெடுப்பை மிகப்பெரிய வெற்றி முன்னெடுப்பாக நீங்கள் மாற்றிக் காட்ட வேண்டும். இந்த திருச்சி மாவட்டம், உறுப்பினர்கள் சேர்க்கையில் முதல் இடத்தில் வருகின்ற நிலையில், உங்களின் பணிகள் அமைய வேண்டும் என்றுக் கேட்டுக் கொள்கிறேன்.

**உங்கள் மீது நம்பிக்கை**

நம் கட்சிக்காரர்கள் வீடு மட்டுமல்ல, எல்லா கட்சிக்காரர்களின் வீடுகளுக்கும் செல்லுங்கள். அ.தி.மு.க - பா.ஜ.க-வின் துரோகங்களை எடுத்துச் சொல்லி, நம் தமிழ் மண் - தமிழ் மொழி காக்க கழகத்திற்கு ஆதரவு தாருங்கள் என்று கேளுங்கள். மக்களுடன் பழகுங்கள். அவர்களின் கோரிக்கைகளைக் கேளுங்கள். உங்களால் செய்துகொடுக்க முடிந்தால், நீங்களே செய்து கொடுங்கள். உங்களின் பகுதியில் இருக்கின்ற பகுதிச் செயலாளரிடமோ, வட்டச் செயலாளரிடமோ அல்லது மாவட்ட அமைச்சரின் கவனத்திற்கு எடுத்துச் செல்லுங்கள். மக்களுடன், மக்களாகப் பழகினீர்கள் என்றால், மக்களுக்கு உங்கள் மீது நம்பிக்கை வரும். அந்த நம்பிக்கை வந்துவிட்டாலே, உங்களுக்கான தகுதியை வளர்த்துக் கொண்டீர்கள் என்று அர்த்தம்.

**பா.ஜ.க.– பயம்– பதற்றம்**

நான் மீண்டும் சொல்கிறேன். சரியான நேரத்தில் தலைவர் அவர்களிடம் சொல்லி, சரியான அங்கீகாரத்தை உங்களுக்குப் பெற்றுத் தருவேன். ஆனால், அதற்கான தகுதியை, நீங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். மக்கள் நமக்கு 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற முன்னெடுப்பில் கொடுக்கின்ற ஆதரவைப் பார்த்துவிட்டு, எதிர்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அவர்களுக்கு ஒருவித பயமும், பதற்றமும் ஏற்பட்டு இருக்கிறது. அதுமட்டுமல்ல, பா.ஜ.க-வுடன் கூட்டணி வைத்த பிறகு எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் இன்றைக்கு முழுசங்கியாகவே மாறிவிட்டார். நம் ஆட்சியைக் குறை சொல்வதற்கு எதுவுமே இல்லை என்று, அறநிலையத்துறையின் நிதியை எடுத்து கல்லூரி கட்டி விட்டீர்களே? இது எவ்வளவு பெரிய அநியாயம் என்று கேட்கிறார், முன்னாள் முதலமைச்சர், எதிர்க் கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள்.

மாணவர்கள் கல்லூரிகளுக்கும், பள்ளிக்கூடத்திற்கும் செல்வது அவருக்குப் பிடிக்கவில்லை. அதனால்தான் சொல்கிறேன், அவர் முழு சங்கியாகவே இன்றைக்கு மாறிவிட்டார். எடப்பாடியின் இந்தப் பேச்சுக்கு மாணவர்கள், பெற்றோர்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு கிளம்பியவுடன் இன்றைக்கு நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை என்று சொல்லி மலுப்புகிறார். நம் வீட்டு பிள்ளைகளின் கல்விக்கு எதிராகப் பேசிய எடப்பாடி பழனிச்சாமி அவர்களுக்கு தமிழ்நாட்டு மக்களும், மாணவர்களும் சரியான நேரத்தில், சரியான பாடத்தைக் கற்றுக் கொடுப்பார்கள்.

இன்றைக்கு தமிழ்நாட்டிற்குள் பா.ஜ.க-விற்கான பாதையைப் போட்டுக் கொடுக்கின்ற வேலையில் அ.தி.மு.க இறங்கி இருக்கிறது. இதை தமிழ்நாட்டு மக்கள் என்றைக்கும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். கருப்பு-சிவப்பு கரை வேட்டி கட்டிய கடைசி தி.மு.க. காரன் இருக்கின்றவரை என்றைக்கும் அதை அனுமதிக்கமாட்டான்.

**முறியடிக்க வேண்டிய பொறுப்பு**

அ.தி.மு.க - பா.ஜ.க. கூட்டணி வந்தால், தமிழ்நாட்டிற்குள் இந்தித் திணிப்பு வரும். தமிழ்நாட்டிற்குள் புதிய கல்விக் கொள்கை வரும். இதையெல்லாம் மக்களிடம் உணர்த்திப் பேச வேண்டும். இந்தக் கூட்டணி வந்தால் தமிழ்நாட்டின் உரிமைகள் மீண்டும் பறிபோகும். ஆகவே, பா.ஜ.க-வின் சூழ்ச்சிகளை முறியடிக்க வேண்டிய பொறுப்பு திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணி நிர்வாகிகளான உங்களுக்கு அதிக அளவில் பொறுப்புகள் இருக்கின்றன.

2026-ல் 200-க்கும் அதிகமான தொகுதிகளில் நம் கழக அணி வெற்றிப்பெற வேண்டும் என்றால், அதற்கு ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் இளைஞர் அணி நிர்வாகிகளின் உங்களின் பணி மிகமிக அவசியம்.

குறிப்பாக, திருச்சி மாவட்டத்தில் திருச்சி மேற்கு, திருச்சி கிழக்கு, திருவெறும்பூர், மணப்பாறை, மண்ணச்சநல்லூர், ஸ்ரீரங்கம், முசிறி, லால்குடி, துறையூர் ஆகிய 9 தொகுதிகளிலும் திராவிட முன்னேற்றக் கழக அணி, உதய சூரியன் அணி வெற்றி பெற்று காட்ட வேண்டும்.

**இளைஞர் அணியின் பங்கு**

கழகம் 7-வது முறையாக ஆட்சி அமைக்க வேண்டும் என்றால், நம் தலைவர் அவர்கள் 2-வது முறையாக முதலமைச்சர் நாற்காலியில் உட்கார வேண்டும் என்றால், அதற்கு நம் இளைஞர் அணியின் பங்கு மிகமிக அவசியம் என்பதை நீங்கள் நிரூபித்துக் காட்ட வேண்டும்.

நாம் இளைஞர் அணி என்றாலும், என்றைக்கும் ஒரே அணி. அது கலைஞர் வழியில் வந்த நம் தலைவர் அணி என்பதை நீங்கள் மனதில் ஏந்திக்கொள்ளுங்கள். உங்களின் பணி சிறக்க வாழ்த்துகள். வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு. இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் அவர்கள் எழுச்சிமிக்க உரையாற்றினார்.

**பங்கேற்றவர்கள்**

கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு, திருச்சி தெற்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மாவட்டச் செயலாளர்கள் காடுவெட்டி தியாகராஜன், வைரமணி, மாநகரச் செயலாளர் மேயர் அன்பழகன், மதிவாணன், சட்டமன்ற உறுப்பினர்கள் சௌந்தரபாண்டியன், ஸ்டாலின்குமார், பழனியாண்டி, கதிரவன், இளைஞர் அணி துணைச் செயலாளர் ஆனந்தகுமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வெங்கடேஷ்குமார், கார்த்திக், மாநகர அமைப்பாளர் முத்துதீபக், உள்பட ஒன்றிய பகுதி பேரூர் அமைப்பாளர்- துணை அமைப்பாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.